THE NEW INDIAN EXPRESS
03 VILLUPURAM

# Upgraded haemodialysis services launched by MP in JIPMER

EXPRESS NEWS SERVICE @ Puducherry

RAJYA Sabha member S Selvaganapathy inaugurated the upgraded haemodialysis services facility at the Department of Nephrology in JIPMER for dialysis of emergency patients and inpatients on Friday.

The upgraded facility, set up at a cost of ₹2.04 crore, comprises a state-of-the-art automated and dual-stage reverse osmosis water treatment plant with a provision for heat disinfection, which gives out 'ultrapure water' for dialysis treatment, said JIPMER Director Dr Rakesh Aggarwal.

Further, it has four haemodiafiltration machines costing ₹48 lakh. This will allow the facility to offer a new advanced dialysis modality which improves the chance of long-term survival in patients upon regular dialysis treatment.

JIPMER is the only Institution in Puducherry and the first government institution in south India with facilities for online haemodiafiltration using ultrapure water.

JIPMER has been offering kidney transplantation services regularly since 2012, and has so far performed 320 kidney transplants, including 47 in 2023.

# ஜிப்மரில் மேம்படுத்தப்பட்ட ஹீமோடையாலிசிஸ் சேவை தொடக்கம்

● புதுச்சேரி

ஜிப்மர் சிறுநீரகவியல் துறையில் மேம்படுத்தப்பட்ட ஹீமோடையாலிசிஸ் சேவை தொடங்கப்பட்டது. ரூ. 2.04 கோடியில் டயாலிசிஸ் வசதி மேம்படுத்தப்பட்டுள்ளது.

ஜிப்மரில் இதன் தொடக்க விழா நேற்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை செல்வகணபதி எம்.பி தொடக்கி வைத்து சிறப்புரையாற்றினார். ஜிப்மர் மருத்துவக் கண்காணிப்பாளர் டாக்டர் எல்.என். துரைராஜன் வரவேற்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் ஜிப்மர் இயக்குநர் டாக்டர் ராகேஷ் அகர்வால் பேசுகையில், “ஜிப்மர் நிறுவனம் ரூ.2.04 கோடி செலவில் அவசர மற்றும் உள்நோயாளிகளுக்கான டயாலிசிஸ் வசதிகளை மேம்படுத்தியுள்ளது. இது டயாலிசிஸ் சிகிச்சைக்கு அதி தூய நீர் (அல்ட்ராபியூர் வாட்டர்) வழங்கும், வெப்ப கிருமி நீக்கம் செய்யும் வசதியுடன் கூடிய அதிநவீன தானியங்கி இரட்டை நிலை நீர் சுத்திகரிப்பு வசதியை கொண்டுள்ளது. கூடுதலாக ரூ.48 லட்சம் செலவில் நான்கு ஹீமோடையட் பில்ட்ரேஷன் இயந்திரங்கள் உள்ளன.

வழக்கமான டயாலிசிஸ் சிகிச்சையை விட இந்த புதிய டயாலிசிஸ் முறை நோயாளிகளின் நீண்டகால உயிர்வாழ்வை அதிகரிக்கும். செப்சிஸ் (sepsis) தொடர்பான கடுமையான சிறுசீரக பாதிப்பு உள்ள நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதிலும் இது பயனுள்ளதாக இருக்கும்.



↑ ஜிப்மர் சிறுநீரகவியல் துறையில் மேம்படுத்தப்பட்ட ஹீமோடையாலிசிஸ் சேவை தொடங்கப்பட்டது.

இந்த அதி தூய நீர் பயன்படுத்தி, ‘ஹீமோடியா∴பில்ட்ரேஷன்’ சிகிச்சை வசதிகளை கொண்ட ஜிப்மர் மருத்துவமனை தென்னிந்தியாவின் முதல் அரசு மருத்துவ நிறுவனம் ஆகும். ஜிப்மர் நிறுவனம் 2012-ம் ஆண்டு முதல் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை சேவைகளை வழங்கி வருகிறது. இதுவரை 3,209 சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளது. இதில் 2023-ம் ஆண்டின் 47 சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகளும் உள்ளடங்கும். பல சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகள் ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய போஜனா (ABPMJAY) திட்டம் மற்றும் பிரதமரின் தேசிய நிவாரண நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

ஜிப்மர் ரத்த வகை தடைகள் இல்லாத சிகிச்சை முறைகளை 2023-ம் ஆண்டு தொடங்கியது. இது ரத்த வகை பொருந்தாத நன்கொடையாளரிடமிருந்து சிறுநீரகத்தைப் பெற ஒரு நபரை அனுமதிக்கிறது. கடந்த 5 மாதங்களில் இதுபோன்ற மூன்று மாற்று அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. ஜிப்மர் 2013-ம் ஆண்டு முதல் இறந்த நன்கொடையாளர்களிடமிருந்து உறுப்புகளை தானமாக பெற்று உறுப்பு மாற்று சிகிச்சையை நடத்தி வருகிறது. இதுவரை 51 இறந்த நன்கொடையாளர்களிடமிருந்து உறுப்புகள் மற்றும் திசுக்கள் பெறப்பட்டுள்ளன.

ஜிப்மரில் மேற்கொள்ளப்பட்ட 320 சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகளில் 104 இறந்த நன்கொடையாளர்களிடமிருந்து பெறப்பட்டவை ஆகும். மேலும் இந்த துறையில் பேராசிரியர்களின் எண்ணிக்கை 3-ல் இருந்து 5 ஆகவும் மற்றும் உயர்படிப்பு பயற்சி பெறுபவர்களின் எண்ணிக்கை 6-ல் இருந்து 8 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது” என்று தெரிவித்தார்.

சிறுநீரகவியல் துறையின் மருத்துவப் பேராசிரியர் மற்றும் தலைவர் ஸ்ரீஜித் பரமேஸ்வரன் நன்றி கூறினார்.

தினகரன்
மார்ச் 9, 2024 சனிக்கிழமை

# ஜிப்மரில் ஹீமோ டயாலிசிஸ் சேவை

## எம்.பி. துவக்கி வைத்தார்



புதுச்சேரி ஜிப்மரில் சிறுநீரகவியல் துறையில் மேம்படுத்தப்பட்ட ஹீமோ டயாலிசிஸ் சேவையை செல்வகணபதி எம்.பி. துவக்கி வைத்தார்.

புதுச்சேரி, மார்ச் 9: புதுச்சேரி ஜிப்மர் சிறுநீரகவியல் துறையில் மேம்படுத்தப்பட்ட ஹீமோ டயாலிசிஸ் சேவை துவக்க விழா நேற்று நடந்தது. மருத்துவ கண்காணிப்பாளர் துரைராஜன் வரவேற்றார். ஜிப்மர் இயக்குனர் ராகேஷ் அகர்வால் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக செல்வகணபதி எம்.பி. கலந்து கொண்டு ஹீமோ டயாலிசிஸ் சேவையை துவக்கி வைத்தார். இவ்விழாவில் மருத்துவர்கள், ஊழியர்கள், நோயாளிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். சிறுநீரகவியல் துறை தலைவர் டாக்டர் ஸ்ரீஜித் பரமேஸ்வரன் நன்றி கூறினார்.

இதுகுறித்து ஜிப்மர் மருத்துவர்கள் கூறுகையில், ஜிப்மரில் ரூ.2.04 கோடி செலவில் அவசர மற்றும் உள்நோயாளிகளுக்கான டயாலிசிஸ் வசதி மேம்படுத்தப்பட்டுள்ளது. இது டயாலிசிஸ் சிகிச்சைக்கு 'அதி தூய நீர்' (அல்ட்ராபியூர் வாட்டர்) வழங்கும் வெப்ப கிருமி நீக்கம் செய்யும் வசதியுடன் கூடிய அதிநவீன தானியங்கி இரட்டை நிலை நீர் சுத்திகரிப்பு வசதியை கொண்டுள்ளது. கூடுதலாக ரூ.48 லட்சம் செலவில் நான்கு ஹீமோ டயபில்ட்ரேஷன் இயந்திரங்கள் உள்ளன. வழக்கமான டயாலிசிஸ் சிகிச்சையை விட இதன் மேம்படுத்தப்பட்ட ஆன்லைன் ஹீமோ டயபில்ட்ரேஷன் எனப்படும் புதிய டயாலிசிஸ் முறை நோயாளிகளின் நீண்டகால உயிர் வாழ்வை அதிகரிக்கும் செப்சிஸ் தொடர்பான கடுமையான சிறுநீரக பாதிப்பு உள்ள நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதிலும் இது பயனுள்ளதாக இருக்கும். இந்த சிகிச்சை வசதிகளை கொண்ட ஜிப்மர் மருத்துவமனை புதுச்சேரி மற்றும் தென்னிந்தியாவின் முதல் அரசு மருத்துவ நிறுவனம் ஆகும். என்றனர்.